சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்.
முன்னிலை: திருமதி.K.கன்யாதேவி, B.A., B.L.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.
2021ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண். 29/2020

கெஜலட்சமி ... வாதி

/ எதிர் /

A. பாஸ்கரன் ... பிரதிவாதி

இவ்வழக்கு 12.03.2021ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஜான்மோகன்தாஸ் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

தீர்ப்புரை

பிராது சொத்தில் வாதிக்குரிய பாதி பங்குபாகத்தை பிரதிவாதி நயமிடர்பார்த்து, வாதியின் தனித்த சுவாதீனத்தில் ஒப்படைக்கும்படியாகப் பிரிவினைக்கு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும், அவ்வாறு பிரதிவாதி பிரித்து சுவாதீனம் ஒப்படைக்க மறுக்கும் பட்சம் வழக்குரை சொத்தில் வாதிக்குரிய பாதி பங்கு பாகசொத்தை ஆணையர் ஒருவர்மூலம் நியமிக்கச்செய்வதன் மூலம் வாதி பெற இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனுச்செய்ய வாதிக்கு உரிமை வழங்கி உத்தரவு பிறப்பிக்கக்கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை வாதிக்க பிரதிவாதி செலுத்தக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:

வழக்குரை சொத்து ஆதியில் வாதி பிரதிவாதியின் தாத்தா சூரியகண்ணுப்பிள்ளை அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு அவர் தகப்பனார் அய்யாத்துரை பிள்ளைக்கு பாத்தியப்பட்டு அவரும், அவருடைய முதல் மனைவியான தங்கம் மகன் அய்யம்பெருமாள் ஆகியோர் அடங்கிய கூட்டுக்குடும்ப சொத்தாக வைத்து அனுபவித்து வரப்படடது என்றும், அதன்பின் மனைவி தங்கமும் அடுத்து மகன் அய்யம்பெருமாள் கல்யாணம் ஆகாமல் இறந்துவிட்டார்கள் என்றும், அதன்பின் மேற்படி அய்யாத்துரை பிள்ளை 2-வது மனைவியாக சின்னத்தாயம்மாளை திருமணம் செய்து அவருக்கு வாதியும் பிரதிவாதியும் வாரிசாவார்கள் என்றும், பின் அய்யாத்துரை மற்றும் 2-வது மனைவியான சின்னத்தாயம்மாள், வாதி பிரதிவாதி ஆகியோரின் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வரப்பட்டது என்றும், தற்போது வரை வழக்குரை சொத்திற்கு வாதி, பிரதிவாதியின் தகப்பனாரான அய்யாத்துரை பிள்ளையின் பெயரிலேயே வீட்டுவரி, தண்ணீர் வரி ஆகியவைகள் செலுத்தி வரப்படுகிறது என்றும், இந்நிலையில் சின்னத்தாயம்மாளும் இறந்துவிட்டார் என்றும், அடுத்து அய்யாத்துரை பிள்ளையும் 23.08.2011ம் தேதி இறந்துவிட்டார் என்றும், மேற்படி வாதி, பிரதிவாதியின் பெற்றோர்கள் இறந்த பின் வாதியும் பிரதிவாதியும் கூட்டுக்குடும்ப சொத்தாக வைத்து அனுபவித்து வரப்படுகிறது என்றும், அய்யாத்துரை பிள்ளை உயிருடன் இருந்த காலத்தில் எந்தவித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றும், அதனால் வழக்குரைச்சொத்தில் கீழ்தளத்தில் வாதியும், மேல்தளத்தில் பிரதிவாதியும் குடியிருந்து வருகிறார்கள் என்றும், அதனடிப்படையில் பிராது சொத்து வாதி மற்றும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தாகும் என்றும், இந்நிலையில் பிரதிவாதி வாதிக்கு பிராது சொத்திலுள்ள பங்கினையும் சேர்த்து தானே அனுபவித்து வரவேண்டும் என்று திட்டமிட்டு பிராது சொத்தில்

உள்ள வாதியின் அனுபவத்தை காலிசெய்து பிராது சொத்தினை விட்டு வெளியேறும்படி வாதியை வா்மித்து வருகிறாா் என்றும், பிராது சொத்தில் வாதிக்கு சேரவேண்டிய சரிபாதி பங்கினை பிரித்து கொடுக்க பிரதிவாதி சட்டப்படி கடமைப்பட்டவா் ஆவாா் என்றும், அதனால் வாதி வழக்கறிஞா் மூலம் கடந்த 20.10.2019ம் தேதி சட்ட அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பியுள்ளாா் என்றும், அதனை 31.10.2019ம் தேதி பெற்றுக்கொண்ட பிரதிவாதி கடந்த 26.11.2019ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளாா் என்றும், அதில் தாவா சொத்து பூா்வீக சொத்து என்பதை ஒப்புக்கொள்கிறாா் என்றும், ஆகவே தாவா சொத்தில் வாதிக்கு உள்ள 1/2 பங்கு பாகத்தை பிரதிவாதி நயமிடா் பாா்த்து பிரிவனை செய்து வாதிக்கு தனித்த சுவாதீனம் பெறவும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) பிரச்சனை:

1) இவ்வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

4) கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்குரை சொத்து ஆதியில் வாதி பிரதிவாதியின் தாத்தா சூரியகண்ணுப்பிள்ளை அவா்களுக்கு பூா்வீகமாக பாத்தியப்பட்டு அவா் தகப்பனாா் அய்யாத்துரை பிள்ளைக்கு பாத்தியப்பட்டு அவரும், அவருடைய முதல் மனைவியான தங்கம் மகன் அய்யம்பெருமாள் ஆகியோா் அடங்கிய கூட்டுக்குடும்ப சொத்தாக வைத்து அனுபவித்து வரப்படடது என்றும், அதன்பின் மனைவி தங்கமும் அடுத்து மகன் அய்யம்பெருமாள் கல்யாணம் ஆகாமல் இறந்துவிட்டாா்கள் என்றும், அதன்பின் மேற்படி அய்யாத்துரை பிள்ளை 2-வது மனைவியாக சின்னத்தாயம்மாளை திருமணம் செய்து அவருக்கு வாதியும் பிரதிவாதியும் வாரிசாவாா்கள் என்றும், பின் அய்யாத்துரை மற்றும் 2-வது மனைவியான சின்னத்தாயம்மாள், வாதி பிரதிவாதி ஆகியோாின் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வரப்பட்டது என்றும், தற்போது வரை வழக்குரை சொத்திற்கு வாதி, பிரதிவாதியின் தகப்பனாரான அய்யாத்துரை பிள்ளையின் பெயரிலேயே வீட்டுவரி, தண்ணீா் வரி ஆகியவைகள் செலுத்தி வரப்படுகிறது என்றும், இந்நிலையில் சின்னத்தாயம்மாளும் இறந்துவிட்டாா் என்றும், அடுத்து அய்யாத்துரை பிள்ளையும் 23.08.2011ம் தேதி இறந்துவிட்டாா் என்றும், மேற்படி வாதி, பிரதிவாதியின் பெற்றோா்கள் இறந்த பின் வாதியும் பிரதிவாதியும் கூட்டுக்குடும்ப சொத்தாக வைத்து அனுபவித்து வரப்படுகிறது என்றும், அய்யாத்துரை பிள்ளை உயிருடன் இருந்த காலத்தில் எந்தவித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றும், அதனால் வழக்குரைச்சொத்தில் கீழ்தளத்தில் வாதியும், மேல்தளத்தில் பிரதிவாதியும் குடியிருந்து வருகிறாா்கள் என்றும், அதனடிப்படையில் பிராது சொத்து வாதி மற்றும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூா்வீக சொத்தாகும் என்றும், இந்நிலையில் பிரதிவாதி வாதிக்கு பிராது சொத்திலுள்ள பங்கினையும் சோ்த்து தானே அனுபவித்து வரவேண்டும் என்று திட்டமிட்டு பிராது சொத்தில் உள்ள வாதியின் அனுபவத்தை காலிசெய்து பிராது சொத்தினை விட்டு வெளியேறும்படி வாதியை வா்மித்து வருகிறாா் என்றும், பிராது சொத்தில் வாதிக்கு சேரவேண்டிய சரிபாதி பங்கினை பிரித்து கொடுக்க பிரதிவாதி சட்டப்படி கடமைப்பட்டவா் ஆவாா் என்றும், அதனால் வாதி வழக்கறிஞா் மூலம் கடந்த 20.10.2019ம் தேதி சட்ட அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பியுள்ளாா் என்றும், அதனை 31.10.2019ம் தேதி பெற்றுக்கொண்ட பிரதிவாதி கடந்த 26.11.2019ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளாா் என்றும், அதில் தாவா சொத்து பூா்வீக சொத்து என்பதை ஒப்புக்கொள்கிறாா் என்றும், ஆகவே தாவா சொத்தில் வாதிக்கு உள்ள 1/2 பங்கு பாகத்தை பிரதிவாதி நயமிடா் பாா்த்து பிரிவனை செய்து வாதிக்கு தனித்த சுவாதீனம் பெறவும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கில் பிரதிவாதிக்கு அழைப்பாணை சாா்வு செய்யப்பட்டும், இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினா் ஆக்கப்பட்டுள்ளாா்.

6) வாதி தரப்பில் வாதி வாசா1 ஆக விசாரிக்கப்பட்டு, அய்யாத்துரை பிள்ளை என்பவரது இறப்புச்சான்றிதழ் மற்றும் வாரிசுச்சான்றிதழின் அசல், மின்கட்டண ரசீதின் அசல், டவுன் சர்வே ரிஜிஸ்டரின் உண்மை நகல், சொத்து மதிப்பிற்கான கணிணி நகல், நிலபுல வரைபடத்தின் உண்மை நகல், வில்லங்கச்சான்றிதழின் அசல், 30.10.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல், அஞ்சல் ஒப்புதல் அட்டையின் அசல், 26.11.2019 தேதியிட்ட பதில் அறிவிப்பின் சார்வு செய்யப்பட்ட நகல் ஆகியவை முறையே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதியின் வழக்கிற்கு ஆதரவாக பிரபாகரன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பின்னர் பிரதிவாதி இவ்வழக்கில் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார். மேற்படி வா.சா.1, வா.சா.2 சாட்சிகள் மற்றும் வாசாஆ.1 முதல் வாசாஆ.10 வரையிலான ஆவணங்களை பரிசீலிக்கையில், வாதி தனது வழக்கை நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்து வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்று தீர்மானிக்கிறது.

7) முடிவாக, இவ்வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிராது சொத்தில் வாதிக்குரிய பாதி பங்கு பாகத்தை பிரதிவாதி நயமிடர் பிரித்து, வாதியின் தனித்த சுவாதீனத்தில் ஒப்படைக்கும்படி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது. கால அவகாசம் 3 மாதம் அளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 24.03.2021ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)கா.கன்யாதேவி

சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்:</u>

வா.சா.1 – கெஜலட்சுமி
வா.சா.2 – பிரபாகரன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| வாசாஆ1 | -- | அய்யாத்துரை பிள்ளை என்பவரது இறப்புச்சான்றிதழ் | அசல் |
| வாசாஆ2 | -- | அய்யாத்துரை பிள்ளை என்பவரது வாரிசுச்சான்றிதழ் | அசல் |
| வாசாஆ3 | -- | மின்கட்டண ரசீது | அசல் |
| வாசாஆ4 | -- | டவுன் சர்வே ரிஜிஸ்டர் | உண்மை நகல் |
| வாசாஆ5 | -- | சொத்து மதிப்பு | கணிணி நகல் |
| வாசாஆ6 | -- | நிலபுல வரைபடம் | உண்மை நகல் |
| வாசாஆ7 | -- | வில்லங்கச்சான்றிதழ் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வாசாஆ8 | 30.10.2019 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வாசாஆ9 | -- | அஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் |
| வாசாஆ10 | 26.11.2019 | பதில் அறிவிப்பு | சார்வு செய்யப்பட்ட நகல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

- இல்லை -

(ஒம்)கா.கன்யாதேவி
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

... உண்மை நகல் ...